**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 33/2015**

**23.10.2025.**

**DW - 1**

**பி.வா.சா.1.மோகன்தாஸ், த/பெ. மாரியப்பன், அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:

உயிலை இந்த நீதிமன்றத்தை தவிர வேறு எங்கும் நான் தாக்கல் செய்யவில்லை. என் தகப்பனார் சொத்துக்கள் குறித்து நான் பட்டா மாறுதல் செய்யவில்லை என்றால் - சரிதான். என் குடும்பத்தில் பாகப்பிரிவினை எந்த வருடத்தில் நடந்தது என்றால் - 86 - 87 ம் ஆண்டில் நடந்தது. அந்த பாகப்பிரிவினை நடைப்பெற்றது என்பதற்கான ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் - எழுத்துப்பூர்வமாக இல்லை. வாய்மொழியாக நடந்தது. எத்தனை அயிட்ட சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை நடைப்பெற்றது என்றால் - வழக்கில் சொல்லியுள்ள 22 அயிட்ட சொத்துக்களை குறித்து பாகப்பிரிவினை செய்துக்கொண்டோம். யார், யாருக்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்பதை காட்டுவதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் - இல்லை. பெந்தக கடன் எப்போது ஏற்பட்டது என்றால் - என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் ஏற்பட்டது. பெந்தக கடன் பத்திரங்கள் யார் பெயரில் எழுதிக்கொடுத்தது என்றால் - சுப்ரமணிய செட்டியாருக்கும் அவரது அம்மாவிற்கும் எழுதிக்கொடுத்தது. 2016 ல் பெந்தக கடனை தீர்த்துவிட்டோம். பெந்தக கடனை பற்றி உயிலில் என் அப்பா சொல்லியுள்ளாரா என்றால் - சொல்லவில்லை. உயிலில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் - என் தகப்பனாருக்கு என்று ஒதுக்கப்பட்ட 5 அயிட்ட சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது. என் தகப்பனாருக்கு இன்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் - இல்லை. என் தகப்பனார் 2008 ம் ஆண்டு 3 ம் மாதம் இறந்தார். தேதி நினைவில்லை. இந்த உயில் விவரம் எப்போது எனக்கு தெரியும் என்றால் - 2010 ல் வீட்டை சுத்தம் செய்தபோது தெரியும். இந்த உயிலை எப்போது, யார் எழுதியது என்றும் யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்பது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் - சரிதான். என் தகப்பனார் இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றி ஓய்வூதியம் வாங்கியுள்ளார். அவருக்கு ஓய்வூதிய புத்தகத்தில் முத்துப்பேட்டை இந்தியன் வங்கியில் கணக்கை கையாண்டு வந்தார். மாநில அரசின் ஓய்வூதியம் மன்னார்குடி கருவூலத்தில் கையாளப்பட்டு வந்தது. என் தகப்பனர் கையொப்பத்தினை காட்டுவதற்கான வங்கி பாஸ் புத்தகங்கள் உள்ளது. அவற்றை பார்த்தால் என் தகப்பனார் கையெழுத்து இதுதான் என்று என்னால் நிருபிக்க முடியும். என் தகப்பனார் ஆங்கிலத்தில்

கையொப்பம் செய்வாரா அல்லது தமிழில் கையொப்பம் செய்வாரா என்றால் - தமிழில் தான் கையொப்பம் செய்வார். உயிலை தவிர்த்து என் தகப்பனாரின் கையொப்பம் இதுதான் என்று காட்டுவதற்கு வேறு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை. ஆனால் என் அப்பாவின் கையெழுத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் என் வசம் உள்ளது. உயிலை பற்றி தெரிந்துக்கொண்டபின்னர், எனது குடும்பத்தில் எனது சகோதரிகள் பாகப்பிரிவினை சம்மந்தமாக கோரிக்கை வைத்தார்கள் என்றால் - சரிதான். முதலில் பாகப்பிரிவினை செய்யச்சொல்லி கேட்டது எனது சகோதரி செல்வி என்றால் - எல்லோரும் கேட்டார்கள். என் தம்பி மனைவி பேபி, செல்வி, சிவகளை, வாதி அருண்மொழி ஆகியோர்களும் சேரந்து 2010-11ம் ஆண்டு பஞ்சாயத்து வைத்தார்கள். யார் தலைமையில் பஞ்சாயத்து வைத்தார்கள் என்றால் - பட்டுக்கோட்டையில் வெள்ளைச்சாமி என்பவர் தலைமையில் வைத்தார்கள். அதன்பின்னர் பெருகவாழ்ந்தான் அண்ணாதுரை தலைமையிலும் ஒரு பஞ்சாயத்து வைத்தார்கள். இரண்டு பஞ்சாயத்துக்களிலும் உன் அப்பா உயில் எழுதி வைத்துள்ளதையும் பாகம் பிரித்து கொடுத்ததையும் சொல்லியுள்ளேனா என்றால் - சொல்லியுள்ளேன். பாகப்பிரிவினை கேட்டு அடிக்கடி பிரச்சினை தொடர்ந்துக் கொண்டே இருந்தது என்றால் - சரிதான். நான் வாதிகளுக்கு என் அப்பா உயில் மற்றும் பாகப்பிரிவினை சம்மந்தமாக பதில் எழுத்துப்பூர்வமாக கொடுத்தேனா என்றால் - இல்லை. பட்டுக்கோட்டை பஞ்சாயத்திற்கு உயிலை நான் எடுத்துச் சென்றிருந்தேன். அங்கு தகராறு ஏற்பட்டது. உயிலை படித்து பார்த்தபின்னர், இந்த உயிலை என் சித்தப்பா எழுதியுள்ளார் என்று தெரியும். சுப்ரமணியன் த/பெ. பொன்னுசாமி என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். உயில் எதில் எழுதப்பட்டுள்ளது என்றால் - பேப்பரில் எழுதப்பட்டுள்ளது. அது என்ன பேப்பர் என்று தெரியாது. என்ன மையினால் எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது. எத்தனை மையினால் எழுதப்பட்டுள்ளது என்பதும் தெரியாது. உயிலில் கையொப்பம் செய்தவர்கள் உயிருடன் இருக்கிறார்களா என்றால் - என் சித்தப்பா இறந்துவிட்டார். சாட்சி சுப்ரமணியன் உயிருடன் இருக்கிறார். என் சித்தப்பா எப்போது இறந்தார் என்றால் - 10 வருடங்களுக்குள் இறந்தார். உயிலில் போடப்பட்டுள்ளது என் தகப்பனார் கையொப்பம் இல்லை என்றும் அவர் இறந்தபின்னர் அவருடைய கையெழுத்தை புதியதாக புகுத்தி தயார் செய்யப்பட்ட உயில் என்றாலும் உண்மையில் அவ்வாறு எழுதியிருந்தார் இதனை பற்றி அறிவிப்பில் சொல்லியிருப்பேன் என்றாலும் - சரயில்ல. இந்த வழக்கில் 5ம் பிரதிவாதி 2013ல் தஞ்சை வழக்கறிஞர் மூலமாக கொடுத்த அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் - சரியல்ல. எனக்கு அவ்வாறு அறிவிப்பே வரவில்லை. மன்னார்குடி

தாலுக்கா, சித்தமல்லி அஞ்சல், பட்டவெளி கிராமம், மாரியப்பன் மகன் மோகன்தாஸ் என்பது நான்தான். 04.03.2013 ம் தேதியில் இந்த வழக்கின் வாதிகள், வட்டாட்சியர், சார்பதிவாளர், மாவட்ட ஆட்சியர் அனைத்து நபர்களுக்கும் அறிவிப்பு அனுப்பியது போல எனக்கும் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றும் அந்த அறிவிப்பினை நான் பெற்றுக்கொண்டு தற்போது அறிவிப்பு வரவில்லை என்று பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் - சரியல்ல. உண்மையில் அவ்வாறு ஒரு உயில் இருந்திருந்தால் அந்த உயிலை பற்றியும் பாகப்பிரிவினை பற்றியும் குறிப்பிட்டு பதில் அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்றாலும் அவ்வாறு எந்த உயிலும் அப்போது இல்லாத காரணத்தினால் தான் நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் - சரியல்ல. என் 3 ஏக்கர் குத்தகை நிலத்தை பயிர் செய்து வந்தேன். அந்த இடம் யாருக்கு சொந்தமானது என்றால் - அது முத்துப்பேட்டை பெரியநாயகி கோவில் சொத்து ஆகும். எத்தனை வருடங்களாக அந்த சொத்து எங்கள் குடும்பத்தில் இருந்து வருகிறது என்றால் - 15 ஆண்டுகளாக என் பெயரில் நான்தான் குத்தகை செய்து வருகிறேன். அதற்கு முன்பு எங்கள் குடும்ப அனுபவத்தில் அந்த சொத்து இல்லை. திருத்துறைப்பூண்டியை சேர்ந்த ஒருவர் அனுபவத்தில் இருந்தது. யாரிடமிருந்து அனுபவம் பெற்றேன் என்றால் - மேரி என்பவரிடமிருந்து அனுபவம் பெற்றேன். எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் - கோவிலுக்கு குத்தகை கொடுக்க வேண்டும் என்று சொல்லி கொடுத்தார்கள். மேரி நிறைய குத்தகை பாக்கிகள் வைத்திருந்தார், அதனை நான் செலுத்திவிட்டு குத்தகைக்கு எடுத்துக்கொண்டேன். எப்போது குத்தகையை செலுத்தினேன் என்றால் - ஞாபகம் இல்லை. பாகப்பிரிவினைக்கு முன்பா அல்லது பின்பா என்றால் - நினைவில்லை. மேரிதான் பதிவு செய்யப்பட்ட குத்தகைத்தாரர். குத்தகை நிலமும், 3 ஏக்கர் நிலமும் குடும்ப பாகத்தில் உள்ள சொத்துகள் என்றாலும் அந்த சொத்துக்களுக்கும் நான் பாகப்பிரிவினை செய்துக்கொடுக்க கடமைப்பட்டவர் என்றாலும் - சரியல்ல. என் தகப்பனார் இறக்கும்போது மாதம் ரூ.15 அயிரம் வாங்கினார் என்றால் - சரியல்ல. மாநிலம் மற்றும் மத்திய பென்சன் சேர்த்து ரூ.10,500/- வாங்கி வந்தார். அவர் கணக்கில் உள்ள பணத்தை உடனே எடுத்துவந்துவிடுவார். நான் உடன் செல்வேன். என் அப்பா இறக்கும்போது அவரது கணக்கில் எவ்வளவு தொகை இருந்தது என்றால் - பணமில்லை. என் தந்தை இறக்கும்போது ரூ.7 இலட்சம் இருந்தது என்றும் பாஸ்புக்கை பார்த்தால் அது தெரிய வரும் என்றால் - சரியல்ல. அந்த ரூ.7 இலட்சத்தை நான் தான் எடுத்துள்ளேன் என்றால் - சரியல்ல. என் சகோதரி 1/7 பாகம் கேட்டு கோரியுள்ள பாகத்தை கொடுக்க தயாராக உள்ளேனா என்றால் - ஏற்கனவே 1 ஹெக்டேர் 38 ஏர்ஸ் என் அப்பா கொடுத்துவிட்டார். அந்த சொத்து சித்தமல்லி, பட்டவெளி கிராமத்தில் உள்ளது. அந்த சொத்து

எனது குத்தகையில் இருக்கிறது. யார் எனது பெயருக்கு குத்தகை கொடுத்தார்கள் என்றால் - என் சகோதரிகள் 7 பேரும் சேர்ந்து வாய்மொழியாக 1996 ல் கொடுத்தார்கள். 1 மாவிற்கு குத்தகை எவ்வளவு என்றால் - 1 மாவிற்கு 4 கலம் வீதம் குத்தகை ஆகும். எனது கட்சியில் 1 மாவிற்கு 4 கலம் வீதம் குத்தகை கொடுத்து வருகிறேன் என்று எழுதியுள்ளேனா என்றால் - சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் - சரியல்ல. மேற்படி விவரத்தினை எனது நிருபண பிரமாண பத்திரத்தில் சொல்லவில்லை என்றால் - சரிதான். எனது சகோதரிகளை ஏமாற்றவேண்டும் என்பதற்காக குத்தகை என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் அனைத்து சொததுக்களையும் நான்தான் அனுபவித்து வருகிறேன் என்றாலும் பொய்யாக இந்த வழக்கில் கட்சி செய்து வருகிறேன் என்றாலும் - சரியல்ல. வாதிக்கு பாகப்பிரிவினையும் தனித்த சுவாதீனமும் கொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.